**செ. கு. எண்**:05 **நாள்**:05.01.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 5.1.2013

தமிழ் நாடு மின்சார வாரியம், நீலகிரி மாவட்டம், கோத்தகிரி உப கோட்டத்தில் மஸ்தூராராகப் பணிபுரிந்து வந்த திரு. அசோகன் அவர்கள் **24.12.2012** அன்று கண்ணேரிமுக்கு என்ற இடத்தில் மின்கம்பத்தில் பழுதுப் பார்க்கும் பணியினை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மின் பகிர்மான வட்டம், திருத்தணி கோட்டம் மின்சார வாரியப் பிரிவில் மஸ்தூராராகப் பணி புரிந்து வந்த திரு. ரஹீம் பாட்சா அவர்கள் **27.12.2012** அன்று கார்த்திகாபுரத்தில் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில், பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மஸ்தூராராகப் பணிபுரிந்து வந்த திரு. அசோகன் மற்றும் திரு. ரஹீம் பாட்சா ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது காலமான மின்வாரிய மஸ்தூர் பணியாளர் திரு.அசோகன் மற்றும் திரு. ரஹீம் பாட்சா ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**